கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)

தரம் 12, 13

# கணக்கீடு

## பாடத்திட்டம்

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

வணிகக் கல்வித் துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
www.nie.lk

## கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்)

## தரம் 12, 13

# கணக்கீடு

## பாடத்திட்டம்

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)**

**வணிகக் கல்வித் துறை**
**விஞ்ஞான தொழினுட்பப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**
**www.nie.lk**

# கணக்கீடு

புதிய பாடத்திட்டம் - 2017
தரம் - 12, 13

© தேசிய கல்வி நிறுவகம்

வணிகக் கல்வித் துறை,
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | iv |
| 2.0 | நியாயத்துவம் | v-vi |
| 3.0 | தேசிய இலக்குகள் | vii |
| 4.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | viii-ix |
| 5.0 | பாட நோக்கங்கள் | x |
| 6.0 | தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், பாடவேளைகள் | xi-xiii |
| 7.0 | பாடத்திட்டம் | 1- 41 |
| 8.0 | கற்றல் - கற்பித்தல் முறைகள் | 42 |
| 9.0 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்ட ஒழுங்கமைப்பும் | 43-45 |
| 10.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 46 |

## 1.0 அறிமுகம்

தேர்ச்சி மட்டப் பாடத்திட்டமானது இலங்கையிலுள்ள பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கு 2009 ஆம் வருடத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. கொள்கைரீதியாகத் தேசிய கல்வி நிறுவகமானது எட்டு வருடங்களுக்கு ஒருமுறை பாடசாலைப் பொதுக்கல்விக்குரிய பாடத்திட்டத்தினை மறுசீரமைக்கின்றது. இதற்கமைய க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்குரிய கணக்கீட்டுப் பாடத்திட்டமானது பாடவிதான அபிவிருத்தியாளர்களினதும் இப்பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற குழுவொன்றினதும் பங்களிப்புக்களுடன் பாடத்திற்குரிய புதிய நோக்குகள், நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டுப் பாடவிதானத்தினையும், பாடத்திட்ட விருத்தி தொடர்பான முறைகளையும் இனங்காண்பதற்கு நாடளாவிய ரீதியில் ஒன்பது மாகாணங்களிலிருந்தும் பாடப் பணிப்பாளர்கள், ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகக் கல்வித் துறையினரால் அனுபவ ரீதியான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் மூலமான இனங்காணல்கள் புதிய கணக்கீட்டுப் பாடவிதானத்தை மறுசீரமைப்பதில் கவனத்திற் கொள்ளப்பட்டன. இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் பாடம் தொடர்பிலான உச்ச விளைதிறன் கொண்ட கற்றலுக்குச் சரியான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இப்புதிய பாடத்திட்டத்தினை 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இது கல்வியைத் திட்டமிடுபவர் களுக்கு மட்டுமன்றி மாணவர்களுக்கும் தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் பெற்றுக் கொடுப்பதோடு, கற்றற் செயற்றிறன் வாய்ந்த, நாட்டுப்பற்று மிக்க மாணவர்களை நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2.0 நியாயத்துவம்

2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் க.பொ.த. (உயர்தர) கணக்கீட்டுப் புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த பல்வேறு காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

நடந்து முடிந்த குறுகிய காலத்தில் இப்பாட விதானத்தைக் கற்பிக்கும் திறமைமிக்க ஆசிரியர்கள், பாடப் புலத்தில் நிபுணத்துவமிக்க வாண்மையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர்களின் ஒருமைப்பாட்டோடு ஒருங்கிணைந்து மேற்கொண்ட ஆய்வுரீதியான செயற்றிட்டங்களின்போது இனங் காணப்பட்டவற்றிற்கு அமைய சமகால சமூக, பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சமகால பாடவிதானமானது போதியதான உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. எனவே, புதிய போக்குகளுக்குப் பொருந்தக்கூடியவாறு கணக்கீட்டுப் பாடத்தில் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதனால் இவ்வாறு பாடவிதான மறுசீரமைப்பொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது எனக் குறிப்பிட்டுக் காட்டமுடியும்.

- சமகால மற்றும் எதிர்காலச் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும், உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்குப் பொருந்தக்கூடியவாறு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுப் பாடத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும் என்பதை அறியக் கூடியதாக இருந்தது.

- புதிய கணக்கீட்டுப் பாடத்திட்ட உள்ளடக்கத்தில் காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு, காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு என்பன புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகக் கணக்கீட்டுப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு அப்பாடத்திற்குரிய பிரயோக ரீதியான நிலைமைகள் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் பாடப் பணிப்பாளர்களோடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் விளைவொன்றாகப் பாடத்திட்டத்தின் வரிசைப்படுத்தலும் ஒழுங்கமைத்தலும் சீரமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமையப் பழைய பாடத்திட்டத்தில் காணப்பட்ட 5 ஆம் தேர்ச்சியான அதாவது நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தைப் புதிய பாடத் திட்டத்தில் 11 ஆம் தேர்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- மேற்குறிப்பிடப்பட்ட ஆய்வுகளுக்கமைய பாட உள்ளடக்கத்திற்கான பாடஎல்லைகள் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டமையின் காரணமாக புதிய பாடத்திட்டத்தில் பாடஎல்லைகள் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

- முன்னரை விட மாணவர் செயற்பாடுகளுக்குத் தேவையான அளவில் பாடவேளைகளின் எண்ணிக்கைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றமை யின் காரணமாக மாணவர்களுக்குக் கற்றல் செயன்முறையில் செயற்பாட்டு ரீதியான ஈடுபாட்டுடன் பாடவிடயங்களில் மிகச் சிறந்த முறையில் விளக்கங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதற்கு வழியேற்பட்டுள்ளது.
- கணக்கீட்டுப் பாடத்துடன் தொடர்பான புதிய தொழினுட்பங்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் இப்புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பின் மற்றுமோர் எதிர்பார்ப்பாகவுள்ளது.
- இம்மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டமானது பல்கலைக்கழகங்களுக்குரிய அனுமதிகளைப் பெறுவதற்கு மட்டுமன்றிக் கணக்கீட்டுப் பாடத்துடன் தொடர்புடைய வேறு பல பாடநெறிகளைக் கற்பதற்கும், பொருத்தமான தொழில் வாய்ப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் மட்டுமன்றி சிறந்த வாழ்க்கைக் கோலமொன்றை உருவாக்குவதற்கும் வழிசமைத்துள்ளது.

## 3.0 தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்கேற்ப உருவாக்கப்பட்டு இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களின் பல்லினக் கலாசாரத்தை விளங்கி, தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி யெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீ கரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதொரு இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003) - மார்கழி***

## 4.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை போன்ற நான்கு தொகுதிகளினடிப்படையில் தொடர்பாடல் தேர்ச்சிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**எழுத்தறிவு** : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

**எண்ணறிவு** : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்குமுறையாக அளத்தல்.

**சித்திர அறிவு** : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் என்பனவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

**தகவல் தொழில்நுட்பத் தகைமை** : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மனஎழுச்சிகள், நுண்ணறிவு

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சமூகம், உயிரியல், பௌதிகம் போன்ற சூழல்களுடன் தொடர்புறுகின்றன.

**சமூகச் சூழல்:**

தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும் பகிர்ந் தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்:**
வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி, மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதிகச் சூழல்:**
இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும்.
கற்றலுக்கும், வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும், சவால்களை இனம் காணல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தலும், பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல் போன்ற இயலுமைகளை உச்சப்படுத்திக் கொள்வதற்கும் இயலளவை அதிகரித்துக் கொள்வதற்குமான வேலை பொருளுணர்வுடன் தொடர்புடைய திறன்கள்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**
விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும், வெற்றியையும் பெறச் செய்தல்.

## 5.0 பாட நோக்கங்கள்

- கணக்கீட்டின் நியாயபூர்வமான அடிப்படைகள் தொடர்பிலான அடிப்படை விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுத்தல்.
- கணக்கீட்டின் நுட்ப முறைகள் தொடர்பிலான அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளலும், அதனைச் சரியாக நடைமுறைப்படுத்தலும்.
- கணக்கீட்டுப் பாடத்துறையில் திறந்து விடப்பட்டுள்ள நவீன கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- கணக்கீட்டுப் பாடத்துறையிலிருந்து பெற்றுக் கொள்ளும் தேர்ச்சி மட்டங்களை பல்வேறு தொழில்சார் நிலைமைகளில் விளைதிறனாகப் பயன்படுத்துதல்.
- நடைமுறையில் காணப்படுகின்ற பொருளாதார, அரசியல் சூழலின் நிலையான அபிவிருத்திக்குப் பொருத்தமானவாறு வளங்களை விளைதிறன் கொண்டதாகவும், பயனுறுதிமிக்கதாகவும் பயன்படுத்துவதற்கான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல்.
- வணிக அமைப்புக்களின் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல், முன்வைத்தல் என்பவை தொடர்பிலான தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல்.
- பாடத்துறையினை ஆய்வு செய்வதினூடாகப் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களினை எதிர்காலத்தில் ஆய்வு அபிவிருத்திக்கு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல்.

## 6.0 தரம் 12. 13க்கான பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், பாடவேளைகள் என்பவற்றின் எண்ணிக்கை

| தேர்ச்சிகள்<br>தரம் 12 | தேர்ச்சி மட்டங்களின் எண்ணிக்கை | பாடவேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.0 கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும் பகுப்பாய்வு செய்வார். | 03 | 05 |
| 2.0 வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக முன்வைப்பார். | 03 | 15 |
| 3.0 இரட்டைப்பதிவு முறைக்கமைய கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்து நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | 02 | 12 |
| 4.0 முதன்மையேடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களைப் பேரேடுகளில் தாக்கல் செய்வார். | 10 | 93 |
| 5.0 நிதிக் கணக்கீட்டின் அடிப்படைகளைப் பகுப்பாய்வு செய்து கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பயன்பாட்டிற்குட்படுத்துவார். | 14 | 34 |
| 6.0 தனியாளுடைமை வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | 02 | 46 |
| 7.0 உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | 02 | 10 |
| 8.0 இலாப நோக்கற்ற அமைப்புக்களின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | 02 | 16 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்களின் எண்ணிக்கை | பாடவேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9.0 கணக்கறிக்கைகள் பூரணத்துவமற்ற நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | 02 | 14 |
| 10.0 பங்குடைமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | 05 | 55 |
| **தரம் 12 - மொத்தம்** | **45** | **300** |
| **தரம் 13**<br>11.0 நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும்போதும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பயன்படுத்துவார். | 09 | 40 |
| 12.0 வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | 04 | 90 |
| 13.0 விகிதங்கள் மூலம் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்து வரைவிலக்கணப்படுத்தி முகாமைத் தீர்மானங்களுக்குத் தேவையான தகவல்களை முன்வைப்பார். | 06 | 40 |
| 14.0 முகாமைத்துவக் கணக்கீட்டின் அடிப்படை எண்ணக்கருக்களை மதிப்பீட்டிற்குட்படுத்துவார். | 07 | 90 |
| 15.0 கிரய நடத்தை, கிரய அளவு. இலாபப் பகுப்பாய்வு என்பவற்றி னூடாக முகாமைத் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்வார். | 02 | 20 |
| 16.0 மூலதன, முதலீட்டுத் தீர்மானங்களுக்கு உதவுவார். | 02 | 20 |
| **தரம் 13 - மொத்தம்** | **30** | **300** |

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைக்கமைய பகிர்ந்து கொள்வதற்கு முன்மொழியப்படும் திட்டம்

| தரம் | தவணைகள் | தேர்ச்சியும் தேர்ச்சி மட்டங்களும் | பாடவேளைகளின் எண்ணிக்கை | தேர்ச்சி மட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தரம் 12 | 1ம் தவணை | தேர்ச்சி மட்டம் 1.1 - தேர்ச்சி மட்டம் 4.8 வரை | 100 | தேர்ச்சி மட்டங்கள் 16 |
| | 2ம் தவணை | தேர்ச்சி மட்டம் 4.9 - தேர்ச்சி மட்டம் 6.2 வரை | 105 | தேர்ச்சி மட்டங்கள் 18 |
| | 3ம் தவணை | தேர்ச்சி மட்டம் 7.1 - தேர்ச்சி மட்டம் 10.5 வரை | 95 | தேர்ச்சி மட்டங்கள் 11 |
| | | | **300** | **45** |
| தரம் 13 | 1ம் தவணை | தேர்ச்சி மட்டம் 11.1 - தேர்ச்சி மட்டம் 12.4 வரை (காசுப்பாய்ச்சல்கூற்று தவிர) | 100 | தேர்ச்சி மட்டங்கள் 13 |
| | 2ம் தவணை | தேர்ச்சி மட்டம் 12.4 - தேர்ச்சி மட்டம் 14.3 வரை (காசுப்பாய்ச்சல்கூற்று) | 100 | தேர்ச்சி மட்டங்கள் 09 |
| | 3ம் தவணை | தேர்ச்சி மட்டம் 14.4 - தேர்ச்சி மட்டம் 16.2 வரை | 100 | தேர்ச்சி மட்டங்கள் 08 |
| | | | **300** | **30** |

## 7.0 கணக்கீடு - பாடத்திட்டம் - தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 கணக்கீட்டினையும் அதன் முக்கியத்துவத்தினையும் பகுப்பாய்வு செய்வார். | | | | 05 |
| | 1.1 நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை எடுப்பதற்குக் கணக்கீட்டுத் தகவல்கள் முக்கியத்துவம் பெறும் முறையினைப் பகுப்பாய்வு செய்வார். | • கணக்கீடு தொடர்பான அறிமுகம்<br>• கணக்கீட்டின் முக்கியத்துவம்<br>• நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களும், அப் பிரிவினர்களுக்குத் தேவையான தகவல்களும்.<br>• கணக்கீட்டின் வகைகளும் வேறுபாடுகளும்<br>• நிதிக் கணக்கீடு<br>• முகாமைக் கணக்கீடு | • கணக்கீட்டினை விளக்குவார்.<br>• கணக்கீட்டின் நோக்கங்களை தெளிவுபடுத்துவார்.<br>• நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.<br>• கணக்கீட்டின் வகைகளைச் சுட்டிக் காட்டி, அவ் வகைகளைத் தெளிவுபடுத்துவார். | 02 |
| | 1.2 கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றங்களினடிப்படையில் கணக்கீட்டின் மாற்றங்களும், போக்குகளும் இடம்பெறும் முறையினைப் பகுப்பாய்வு செய்வார். | • கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் அறிமுகம்<br>• கணக்கீட்டுச் சூழல் காரணிகள்<br>• பொருளாதார, அரசியல் சூழல்<br>• நுட்பங்களும் தொழில்சார் சூழலும்<br>• சட்டச் சூழல்<br>• சமூக கலாசாரச் சூழல்<br>• தொழினுட்பச் சூழல்<br>• கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றங்களினால் கணக்கீட்டில் ஏற்படும் தாக்கங்கள் | • கணக்கீட்டுச் சூழலை விளக்குவார்.<br>• கணக்கீட்டுச் சூழல் காரணிகளைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• கணக்கீட்டுச் சூழல் காரணிகளின் மாற்றங்கள் கணக்கீட்டுச் செயன்முறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 கணக்கீட்டைச் செயன்முறை யொன்றாகப் பகுப் பாய்வு செய்வார். | • கணக்கீட்டுச் செயன்முறையை பாய்ச்சல் கோட்டு அட்டவணை யின் மூலம் அறிமுகப்படுத்து தல்.<br>• கொடுக்கல் வாங்கல்களை இனங்காணல்.<br>• கொடுக்கல் வாங்கல்களை மூல ஏடுகளில் பதிவு செய்தல்.<br>• கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளுக்கு மாற்றுதல்.<br>• பரீட்சை மீதியைத் தயாரித்தல்.<br>• நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல். | • கணக்கீட்டுச் செயன்முறைகளை விளக்குவார்.<br>• கணக்கீட்டுச் செயன்முறைகளின் படிமுறைகளைச் சுட்டிக் காட்டுவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **2.0 வணிக மொன்றின் கொடுக்கல் வாங்கல் களையும், நிகழ்வுகளை யும் கணக் கீட்டுச் சமன் பாட்டி னூடாக முன் வைப்பார்.** | | | | 15 |
| | 2.1 வணிகமொன்றின் சொத்துக்கள், அதன் பொறுப்புக் கள், உரிமை என்பவற்றின் கூட்டுத்தொகைக் குச் சமப்படும் முறையினைப் பகுப்பாய்வு செய்வார். | • வணிக அலகுசார் எண்ணக்கரு<br>• கொடுக்கல் வாங்கல்கள்<br>• பண அளவீட்டு எண்ணக்கரு<br>• கணக்கீட்டுச் சமன்பாடும் அதன் கூறுகளும்<br>  • சொத்துக்கள்<br>  • பொறுப்புக்கள்<br>  • உரிமையாண்மை / மூலதனம்<br>• கொடுக்கல் வாங்கல்களா னவை சொத்துக்கள், பொறுப் புக்கள், உரிமையாண்மை என்ப வற்றில் ஏற்படுத்தும் தாக்கம். | • வணிக அலகுசார் எண்ணக்கருவை விளக்குவார்.<br>• வணிக அலகொன்றின் கொடுக்கல் வாங்கல் களை விளக்குவார்.<br>• பண அளவீட்டு எண்ணக்கருவைத் தெளிவு படுத்துவார்.<br>• கணக்கீட்டுச் சமன்பாட்டைக் கட்டியெழுப்புவார்.<br>• கொடுக்கல் வாங்கல்களானவை சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கணக்கீட்டுச் சமன் பாட்டினூடாக முன்வைப்பார். | 10 |
| | 2.2 வணிகமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் மூலம் உரிமையில் மாற்ற மேற்படும் முறை யினை அறிந்து கொள்வார். | • உரிமை மாற்றம்<br>• உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்.<br>  • இலாபம் அல்லது நட்டம்<br>    • வருமானம்<br>    • செலவுகள்<br>  • மேலதிக மூலதனம்<br>  • பற்று<br>• தேறிய சொத்துக்களினூடாக இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடல். | • உரிமை மாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைப் பெயரிட்டு விபரிப்பார்.<br>• உரிமையாண்மை / தேறிய சொத்துக்களைக் கணிப்பிடுவார்.<br>• தேறிய சொத்துக்களினூடாக இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வருமானக் கூற்றினையும், நிதி நிலைமைக் கூற்றினையும் தயாரிப்பார். | • இணைதல் எண்ணக்கரு<br>• வருமானக்கூற்று, நிதி நிலைமைக்கூற்று என்பவற்றை அறிமுகப்படுத்துதல்.<br>• வருமானக்கூற்று, நிதி நிலைமைக்கூற்று என்பவற்றைத் தயாரித்தல். | • இணைதல் எண்ணக்கருவினை விளக்குவார்.<br>• வருமானக்கூற்று, நிதிநிலைமைக்கூற்று என்பவற்றை விளக்குவார்.<br>• கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வருமானக் கூற்றைத் தயாரிப்பார்.<br>• கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக நிதிநிலைமைக் கூற்றைத் தயாரிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 இரட்டைப் பதிவு முறைக்கமைய கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய் வார். | | | | 12 |
| | 3.1 கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகளைக் கணக்குகளில் பதிவு செய்யும் போது இரட்டைப் பதிவு விதியினைப் பின்பற்றுவதற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார். | • கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவு<br>• இரட்டைப் பதிவுமுறை | • கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டை விளைவை விளக்குவார்.<br>• இரட்டைப் பதிவு முறையின் ஆரம்பத்தினையும் இரட்டைப் பதிவு முறையையும் தெளிவுபடுத்து வார்.<br>• இரட்டைப் பதிவு விதியினை முன்வைப்பார். | 02 |
| | 3.2 வணிகக் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளை கணக்குகளில் பதிவு செய்வார். | • கணக்கும், அதன் மாதிரி அமைப்பும் பேரேடுகளும்<br>• பொதுப் பேரேடு<br>• துணைப் பேரேடு<br>• நிதிக் கூற்றுக்களின் கூறுகளும் கணக்கு வகைகளும்<br>• சொத்துக்கள்<br>• பொறுப்புக்கள்<br>• உரிமை<br>• வருமானம்<br>• செலவுகள் | • கணக்கினையும் அதன் மாதிரி அமைப்பையும் தெளிவுபடுத்துவார்.<br>• பேரேட்டுக்கணக்கு வகைகளைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளை இரட்டைப் பதிவு விதிக்கேற்ப கணக்குகளில் பதிவு செய்வார்.<br>• நிதிக்கூற்றுக்களின் கூறுகளைப் பெயரிட்டுக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 முதன்மை ஏடுகளைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் களைப் பேரேடுகளில் தாக்கல் செய்வார். | | | | 93 |
| | 4.1 முதன்மை ஏடு களைப் பேணுவ தன் முக்கியத்து வத்தைப் பகுப் பாய்வு செய்வார். | • மூல ஆவணங்களைப் பேணு வதன் முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்களின் வகைகள்.<br>• மூல ஏடுகளைப் பேணுவதன் முக்கியத்துவம்.<br>• மூல ஏடுகளின் வகைகள்<br>• பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக் காக (VAT) பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றில் VAT தொடர் பான இரட்டைப் பதிவுகள் | • மூல ஆவணங்களையும் அதன் முக்கியத் துவத்தையும் விளக்குவார்.<br>• கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங் களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• மூல ஏடுகளையும் அவற்றின் முக்கியத்து வத்தையும் விளக்குவார்.<br>• மூல ஏடுகளையும் அதற்குரிய மூல ஆவணங் களையும் பட்டியற்படுத்துவார்.<br>• பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக (VAT) பதிவு செய்யப்பட்ட வணிகமொன்றில் VAT தொடர்பான இரட்டைப் பதிவுகளைத் தயாரிப்பார். | 04 |
| | 4.2 காசுக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்து வார். | • காசுக் கொடுக்கல் வாங்கல் களை விளக்குதல்.<br>• காசுப் பெறுவனவுகள்<br>• காசுக் கொடுப்பனவுகள்<br>• மூல ஆவணங்கள்<br>• காசு பெறுவனவு நாட்குறிப்பேடு<br>• காசு கொடுப்பனவு நாட்குறிப் பேடு<br>• வங்கி நடைமுறைக் கணக்கி னூடாகக் கொடுக்கல் வாங்கல் களைப் பேணல்.<br>• பேரேடுகளில் பதிவு செய்தல்<br>• காசுக் கட்டுப்பாட்டுக்கணக்கு | • காசுப் பெறுவனவு கொடுப்பனவுகளுக்கான மூல ஆவணங்களைக் குறிப்பிடுவார்.<br>• காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டினது மாதிரி யினைக் கட்டியெழுப்பிக் காசுப் பெறுவனவு களைப் பதிவு செய்வார்.<br>• காசுப் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டினது மாதிரி யினைக் கட்டியெழுப்பி அதில் காசுக் கொடுப் பனவுகளைப் பதிவு செய்வார்.<br>• வங்கியுடன் தொடர்புடைய காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பேணும்பொழுது காசுப் பெறு வனவு நாட்குறிப்பேட்டினையும் காசுக் கொடுப் பனவு நாட்குறிப்பேட்டினையும் தயாரிப்பார்.<br>• காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டினதும், காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டினதும் கொடுக்கல் வாங்கல்களைக் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கி னூடாகப் பொதுப்பேரேட்டிற்குத் தாக்கல் செய்வார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3 சில்லறைச் செலவுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு சில்லறைக் காசேட்டினைப் பேணுவார். | • சில்லறைக் காசேட்டின் முக்கியத்துவம்.<br>• சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்கள்.<br>• சில்லறைக் காசு வசக்கட்டு<br>• சில்லறைக் காசேட்டின் மாதிரியமைப்பு<br>• சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல். | • சில்லறைக் காசுக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூல ஆவணங்களைக் குறிப்பிடுவார்.<br>• சில்லறைக் காசு வசக்கட்டு, வசக்கட்டினை மீள நிரப்பல் என்பவற்றைத் தெளிவுபடுத்துவார்.<br>• சில்லறைக் காசேட்டின் மாதிரியினைக் கட்டியெழுப்புவார்.<br>• சில்லறைக் காசேட்டினைத் தயாரிப்பார்.<br>• சில்லறைக் காசேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக்கு மாற்றுவார். | 12 |
| | 4.4 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பார். | • வங்கி இணக்கக்கூற்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவம்<br>• வங்கிக்கூற்று<br>• வங்கிக்கூற்றினையும், காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினையும் ஒப்பீடு செய்வதன் மூலம் வேறுபாடுகளை இனங்காணல்.<br>• வைப்பிலிடப்பட்டும் இன்னும் தீர்வையாகாத காசோலைகள்<br>• வழங்கப்பட்டும் இன்னும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்<br>• மறுக்கப்பட்ட காசோலைகள்<br>• நேரடி வைப்புக்கள்<br>• நிலையியற் கட்டளைக் கொடுப்பனவுகள்<br>• வங்கிக் கட்டணம்<br>• காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினைச் சீராக்குதல்.<br>• வங்கி கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்தல். | • வங்கிக் கூற்றைத் தெளிவுபடுத்துவார்.<br>• வங்கிக் கூற்றொன்றில் உள்ளடக்க வேண்டிய விடயங்களை முன்வைப்பார்.<br>• காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு என்பவற்றை வங்கிக் கூற்றுடன் ஒப்பிட்டு, அவற்றின் மீதிகள் வேறுபடுவதற்கான காரணங்களை அறிந்து கொள்வார்.<br>• காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியினைச் சீராக்குவார்.<br>• வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.5 வியாபாரப் பொருட்களின் கடன் கொள்வனவு தொடர்பான தகவல்களைப் பேணுவார். | • கொள்வனவு நாட்குறிப்பேட்டின் முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்கள்<br>• மாதிரியமைப்பு<br>• கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்தல்<br>• பொதுப் பேரேட்டுக்கு மாற்றுதல்<br>• கொள்வனவுக் கணக்கு<br>• கடன்கொடுத்தோர் கட்டுப் பாட்டுக் கணக்கு<br><br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட் டின் முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்கள்<br>• மாதிரியமைப்பு<br>• கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.<br>• பொதுப் பேரேடுகளுக்கு மாற்றுதல்.<br>• வெளித்திரும்பல் கணக்கு<br>• கடன்கொடுத்தோர் கட்டுப் பாட்டுக் கணக்கு | • கொள்வனவு நாட்குறிப்பேட்டினை விளக்குவார்.<br>• கொள்வனவு நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய மூல ஆவணங்களைப் பெயரிடுவார்.<br>• கொள்வனவு நாட்குறிப்பேட்டினது மாதிரியமைப்பி னைக் கட்டியெழுப்புவார்.<br>• கொள்வனவு நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வார்.<br>• கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப் பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக்கு மாற்றுவார்.<br><br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டினை விளக்கு வார்.<br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டில் பதிவு செய்வ தற்குரிய மூல ஆவணங்களைப் பெயரிடுவார்.<br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டினது மாதிரியைக் கட்டியெழுப்புவார்.<br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்வார்.<br>• வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டில் பதிவு செய்த கொடுக்கல் வாங்கல்களைப் பேரேடுகளுக்கு மாற்றுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.6 வியாபாரப் பொருட்களின் கடன் விற்பனை தொடர்பான தகவல்களைப் பேணுவார். | • விற்பனை நாட்குறிப்பேட்டினது முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்கள்<br>• மாதிரியமைப்பு<br>• கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.<br>• பொதுப் பேரேட்டிற்கு மாற்றுதல்.<br>• விற்பனைக் கணக்கு<br>• கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு<br><br>• உட்திரும்பல் நாட்குறிப்பேட்டின் முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்கள்<br>• மாதிரியமைப்பு<br>• கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.<br>• பொதுப் பேரேட்டிற்கு மாற்றுதல்.<br>• உட்திரும்பல் கணக்கு<br>• கடன்பட்டோர் கட்டுப் பாட்டுக் கணக்கு | • விற்பனை நாட்குறிப்பேட்டினை விளக்குவார்.<br>• மூல ஆவணங்களைக் குறிப்பிடுவார்.<br>• விற்பனை நாட்குறிப்பேட்டின் மாதிரியமைப்பினைக் கட்டியெழுப்புவார்.<br>• விற்பனை நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல் களைப் பதிவு செய்வார்.<br>• விற்பனை நாட்குறிப்பேட்டில் பதிவு செய்த கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டுக்கு மாற்றுவார்.<br><br>• உட்திரும்பல் நாட்குறிப்பேட்டினை விளக்குவார்.<br>• மூல ஆவணங்களைக் குறிப்பிடுவார்.<br>• உட்திரும்பல் நாட்குறிப்பேட்டின் மாதிரி அமைப்பி னைக் கட்டியெழுப்புவார்.<br>• உட்திரும்பல் நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வார்.<br>• உட்திரும்பல் நாட்குறிப்பேட்டில் பதிவுசெய்த கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளுக்கு மாற்றுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.7 கொடுக்கல் வாங்கல்களைப் பொது நாட்குறிப் பேட்டினூடாகப் பதிவு செய்வார். | • பொது நாட்குறிப்பேட்டின் முக்கியத்துவம்<br>• மூல ஆவணங்கள்<br>• மாதிரியமைப்பு<br>• பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களின் வகைகள்<br>• தொடக்கப் பதிவுகள்<br>• வழுக்களைத் திருத்தும் பதிவுகள்<br>• செம்மையாக்கல் பதிவுகள்<br>• மூடும் பதிவுகள்<br>• ஏனைய பதிவுகள் | • பொது நாட்குறிப்பேட்டினை விளக்குவார்.<br>• மூல ஆவணங்களைக் குறிப்பிடுவார்.<br>• பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களின் வகைகளைக் குறிப் பிடுவார்.<br>• பொது நாட்குறிப்பேட்டின் மாதிரியமைப்பினைக் கட்டியெழுப்புவார்.<br>• பொது நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல் களைப் பதிவுசெய்து பேரேட்டிற்கு மாற்றுவார். | 06 |
| | 4.8 கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் துணைப் பேரேட் டிற்குமிடையிலான தொடர்பினைச் சுட்டிக் காட்டுவார். | • துணைப் பேரேடுகளைப் பேணுவதன் முக்கியத்துவம்<br>• துணைப் பேரேடும் கட்டுப்பாட் டுக் கணக்கும்<br>• கடன்பட்டோர் பேரேடும் கட்டுப்பாட்டுக் கணக்கும்<br>• கடன்கொடுத்தோர் பேரேடும் கட்டுப்பாட்டுக் கணக்கும்<br>• கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி யினையும், துணைப் பேரேட்டு மீதிப் பட்டியலையும் ஒப்பிடுதல். | • துணைப் பேரேடுகளை விளக்கி அவற்றைத் தயாரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விபரிப்பார்.<br>• கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் துணைப் பேரேடுகளைத் தயாரிப்பார்.<br>• துணைப் பேரேடுகளுக்கும், பொதுப் பேரேட்டுக்கு மிடையிலான தொடர்பினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தெளிவுபடுத்துவார்.<br>• கட்டுப்பாட்டுக் கணக்கினையும் துணைப் பேரேட்டு மீதிப்பட்டியலையும் ஒப்பிடுவார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.9 பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | • பரீட்சை மீதி<br>• வருமானக்கூற்று<br>• நிதி நிலைமைக்கூற்று | • பேரேட்டுக் கணக்குகளைச் சமப்படுத்தி பரீட்சை மீதியினைத் தயாரிப்பார்.<br>• பரீட்சை மீதியில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் மூலம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | 13 |
| | 4.10 கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது ஏற்படும் வழுக்களைத் திருத்துவார். | • கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்போது ஏற்படும் வழுக்கள்.<br>• பரீட்சை மீதி வெளிக்காட்டும் வழுக்கள்<br>• பரீட்சை மீதி வெளிக்காட்டா வழுக்கள்<br>• வழுக்களைத் திருத்துதல்<br>• நிதிப் பெறுபேறும் நிதிநிலைமை யில் ஏற்படுத்தும் தாக்கமும் | • கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது வழுக்கள் இடம்பெற முடியும் என்பதைத் தெளிவுபடுத்துவார்.<br>• பரீட்சைமீதி வெளிக்காட்டும் வழுக்களை முன் வைப்பார்.<br>• பரீட்சைமீதி வெளிக்காட்டா வழுக்களை முன் வைப்பார்.<br>• வழுக்களை, திருத்தங்களைப் பொது நாட்குறிப் பேட்டில் பதிவு செய்வார்.<br>• வழுக்களைத் திருத்திய பின் நிதிப் பெறுபேற்றி லும் நிதி நிலைமையிலும் ஏற்படும் தாக்கத்தைச் சுட்டிக் காட்டுவார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 நிதிக் கணக்கீட்டின் அடிப்படைகளைப் பகுப்பாய்வு செய்து கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பயன்பாட்டிற்குட் படுத்துவார். | | | | 34 |
| | 5.1 கணக்கீட்டு எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்வார். | • அறிமுகம் | • கணக்கீட்டு எண்ணக்கரு என்பதை விளக்குவார்.<br>• நிதிக் கணக்கீடுகளின்போது கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை விளக்குவார். | 02 |
| | 5.2 கணக்கீட்டு அலகினையும் அலகுசார் எண்ணக்கருவையும் பகுப்பாய்வு செய்வார். | • அறிமுகமும் முக்கியத்துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித்தல்.<br>• வணிகத்தின் பெயரைப் பயன்படுத்துதல்.<br>• பற்றுக்களை அறிக்கைப் படுத்துதல் | • நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்பொழுது அலகுசார் எண்ணக்கரு பயன்படுத்தப்பட வேண்டுமென்பதனைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.3 தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித்தல்<br>• சொத்துக்களை வகைப்படுத்தல்.<br>• பொறுப்புக்களை வகைப்படுத்தல். | • தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவையும். அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவைப் பயன் படுத்தும் முறையைச் சுட்டிக் காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.4 பண அளவீட்டு எண்ணக்கருவைப் பயன்படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்.<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• பணத்தினால் அளவிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களை யும் நிகழ்வுகளையும் மட்டும் இனங்காணுதல். | • பண அளவீட்டு எண்ணக்கருவையும், அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• பண அளவீட்டு எண்ணக்கருவின் தாக்கமானது நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் என்பதனைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.5 கால அளவீட்டு எண்ணக்கருவைப் பயன்படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• நிதியாண்டின் இறுதியிலுள்ள வாறான நிதி நிலைமைக் கூற்றுக்களைத் தயாரித்தல்.<br>• நிதியாண்டுக்காக வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமைமாற்றல் கூற்று என்ப வற்றைத் தயாரித்தல். | • கால அளவீட்டு எண்ணக்கருவைவும், அதன் பொருத்தப்பாட்டினையும் தெளிவுபடுத்துவார்.<br>• கால அளவீட்டு எண்ணக்கரு பயன்படுத்தப்படும் முறையைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.6 அட்டுறு எண்ணக் கருவைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• கடன்பட்டோரும் கடன்கொடுத் தோரும் உருவாதல்.<br>• அட்டுறுச் செலவுகளை இனங் காணல். | • அட்டுறு எண்ணக்கருவைவும், அதன் பொருத்தப் பாட்டினையும் தெளிவுபடுத்துவார்.<br>• அட்டுறு எண்ணக்கரு பயன்படுத்தப்படும் முறை யினைச் சுட்டிக் காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • முற்பணக் கொடுப்பனவுகளை இனங்காணல்.<br>• வருமதி வருமானங்களை இனங்காணல்.<br>• முற்பணமாகப் பெற்ற வருமானங்களை இனங்காணல். | | |
| | 5.7 தேறல் எண்ணக் கருவைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்.<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• வருமான மூலங்கள்<br>• பொருள் விற்பனை<br>• சேவை வழங்கல்<br>• வட்டி வருமானம்<br>• பங்குலாபம் | • தேறல் எண்ணக்கருவையும், அதன் பொருத்தப் பாட்டினையும் பயன்படுத்துவார்.<br>• வருமான மூலங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• தேறல் எண்ணக்கரு பயன்படுத்தப்படும் முறையைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.8 இணைதல் (பொருந்தச் செய் தல்) எண்ணக் கருவைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• விற்பனையை விற்பனைக் கிரயத்துடன் ஒப்பிடுதல்.<br>• வருமானங்களைச் செலவு களுடன் ஒப்பிடல். | • இணைதல் எண்ணக்கருவைவும், அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• இணைதல் எண்ணக்கரு பயன்படுத்தப்படும் முறையைச் சுட்டிக் காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 5.9 வரலாற்றுக் கிரய எண்ணக்கருவைப் பயன்படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்.<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• வரலாற்றுக் கிரய எண்ணக்கரு கவனத்தில் கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள்.<br>• சொத்து மீள் மதிப்பீடு<br>• இருப்பினை தேறிய தேறத் தக்க பெறுமதிக்குக் கொண்டு வரல். | • வரலாற்றுக் கிரய எண்ணக்கருவையும், அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் பிரயோகத் தினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வரலாற்றுக் கிரய எண்ணக்கருவினைத் தவிர்த் துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு என்பத னைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.10 பாதுகாப்பு (முன்னெச்சரிக்கை) எண்ணக்கருவைப் பயன்படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்.<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டத்திற்காக ஏற்பாடு செய் தல்.<br>• இருப்பினை கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறு மானம் என்பவற்றில் குறை வான பெறுமானத்தில் அறிக்கைப்படுத்தல். | • பாதுகாப்பு எண்ணக்கருவையும், அதன் பொருத் தப்பாட்டினையும் விபரிப்பார்.<br>• பாதுகாப்பு எண்ணக்கரு பயன்படுத்தப்படும் முறையைச் சுட்டிக் காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.11 பொருண்மை (முக்கியத்துவ) எண்ணக்கரு வைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்.<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• ஒப்பீட்டு ரீதியாகக் குறைவான பெறுமானம் கொண்ட சொத்துக் கள் செலவொன்றாகக் கருதப் படும். | • பொருண்மை எண்ணக்கருவையும், அதன் பொருத்தப்பாட்டினையும் விபரிப்பார்.<br>• பொருண்மை எண்ணக்கருவைப் பயன்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.12 தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு வைப் பயன் படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத் துவமும்<br>• எண்ணக்கருவைப் பிரயோகித் தல்.<br>• நிதிக் குத்தகைச் சொத்துக் களை கொள்வனவாளர்களின் ஏடுகளில் சொத்துக்களாக அறிக்கைப்படுத்தல். | • தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கருவையும், அதன் பொருத்தப்பாட்டை யும் விளக்குவார்.<br>• தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கருவைப் பயன்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 5.13 வெளிப்படுத்தல் எண்ணக்கரு வைப் பயன் படுத்துவார். | • வெளிப்படுத்தல் எண்ணக்கரு<br>• வெளிப்படுத்தல் எண்ணக்கரு வைப் பிரயோகித்தல்.<br>• தீர்மானமெடுப்பதற்குரிய அனைத்துத் தகவல்களும் வெளிப்படுத்தச் செய்தல். | • வெளிப்படுத்தல் எண்ணக்கருவையும், அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• வெளிப்படுத்தல் எண்ணக்கருவைப் பிரயோகிக் கும் முறையினைக் குறிப்பிட்டுக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.14 கொள்கை மாறா எண்ணக்கருவைப் பயன்படுத்துவார். | • அறிமுகமும் அதன் முக்கியத்துவமும்.<br>• கொள்கைமாறா எண்ணக்கருவைப் பிரயோகித்தல்.<br>• கணக்கீட்டுக் கொள்கைகள் ஒரே தன்மை கொண்டவையாகப் பயன்படுத்தல். | • கொள்கை மாறா எண்ணக்கருவையும் அதன் பொருத்தப்பாட்டினையும் விளக்குவார்.<br>• கொள்கை மாறா எண்ணக்கருவைப் பயன்படுத்தப்படும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **6.0 தனியாள் உரிமை வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார்.** | | | | **46** |
| | 6.1 தனியாள் உரிமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களின் முக்கியத்துவத்தை விளக்குவார். | • நிதிக் கூற்றுக்கள்<br>• வருமானக்கூற்று<br>• நிதிநிலைமைக்கூற்று | • தனியாளுரிமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக் களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• தனியாளுரிமை வணிகமொன்றின் நிதிக்கூற்றுக் களின் முக்கியத்துவத்தை விளக்குவார். | 04 |
| | 6.2 தனியாள் உரிமை வணிகமொன்றின் வருமானக்கூற்றையும் நிதி நிலைமைக் கூற்றையும் தயாரிப்பார். | • சீராக்கங்கள்<br>• இறுதி இருப்பினைச்சீராக்குதல்<br>• பெறவேண்டிய வருமானங்களும் முற்பண வருமானங்களும்<br>• அட்டுறுசெலவுகளும் முற்பணச் செலவுகளும்<br>• அறவிடமுடியாக் கடன்<br>• ஐயக்கடன் ஏற்பாடு<br>• காசு அல்லது பொருள் பற்றுக்கள்<br>• ஆதனம் பொறி மற்றும் உபகரணத் தேய்வு<br>• இருப்பழிவும் இருப்பு நன்கொடையும்<br>• ஊழியர் சேமலாபநிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் பங்களிப்புக்கள்<br>• பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)<br>• விற்பனையின்றேல் திருப்பி அனுப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட பொருட்கள் | • நிதியாண்டின் இறுதித் திகதியில் இருப்பினைச் சீராக்கம் செய்வார்.<br>• அட்டுறு வருமானங்கள், முற்பண வருமானங்கள் என்பவற்றைச் சீராக்கம் செய்வார்.<br>• அட்டுறுச் செலவுகளையும் முற்பணச் செலவு களையும் சீராக்கம் செய்வார்.<br>• அறவிடமுடியாக்கடனைச் சீராக்கம் செய்வார்.<br>• ஐயக்கடன் ஏற்பாட்டைச் சீராக்கம் செய்வார்.<br>• பற்றுக்களைச் சீராக்குவார்.<br>• ஆதனம் பொறி மற்றும் உபகரணப் பெறுமானத் தேய்வினைச் சீராக்குவார்.<br>• இருப்பழிவு, இருப்பு நன்கொடை என்பவற்றைச் சீராக்கம் செய்வார்.<br>• ஊழியர் சேமலாபநிதியத்திற்குரிய பங்களிப்புக் களைச் சீராக்குவார்.<br>• ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குரிய பங்களிப் பைச் சீராக்குவார்.<br>• பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைச் சீராக்குவார்.<br>• விற்பனை அல்லது திருப்பி அனுப்புக என்ற அடிப் படையில் அனுப்பப்பட்ட பொருட்கள் தொடர்பான சீராக்கங்களைச் செய்வார்.<br>• நிதியாண்டுக்கான வருமானக்கூற்றினையும், நிதி வருட இறுதித் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்றினையும் தயாரிப்பார். | 42 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0 உற்பத்தி வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார்.** | | | | 10 |
| | 7.1 உற்பத்தி வணிகமொன்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பார். | • உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பதன் முக்கியத்துவம்.<br>• உற்பத்திக் கிரயத்தின் கூறுகள்.<br>• முதற்கிரயம் / மூலக்கிரயம்<br>• நேர்மூலப்பொருட்கிரயம்<br>• நேர்கூலிக் கிரயம்<br>• ஏனைய நேர் செலவுகள்<br>• உற்பத்தி மேந்தலைக்கிரயம்<br>• உற்பத்தி வணிகமொன்றில் காணப்படும் இருப்புக்கள்<br>• மூலப்பொருள் இருப்பு<br>• நடைமுறை வேலை இருப்பு<br>• முடிவுப் பொருள் இருப்பு | • உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• உற்பத்திக் கிரயத்தின் கூறுகளை விளக்குவார்.<br>• உற்பத்தி வணிகமொன்றிலுள்ள இருப்புக்களின் வகைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது நடைமுறை வேலை இருப்பை உற்பத்திக் கிரயத்தில் கணிப்பிடுவார்.<br>• உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுவார்.<br>• உற்பத்திக் கிரயத்தின் உதவியுடன் விற்பனைக் கிரயத்தைக் கணிப்பிடுவார். | 02 |
| | 7.2 உற்பத்தி வணிகமொன்றின் நிதிக் கூற்றுக்களினூடாக தீர்மானங்களை மேற்கொள்வார். | • உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிட்டு அதனைக் கணக்குகளில் பதிவு செய்வார்.<br>• உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்கள்.<br>• உற்பத்திக் கிரயக் கூற்று<br>• வருமானக்கூற்று<br>• நிதிநிலைமைக்கூற்று | • உற்பத்தி வணிகமொன்றின் நிதிக்கூற்றுக் களைத் தயாரிப்பார்.<br>• உற்பத்திக் கிரயக் கூற்றினூடாக உற்பத்திக் கிரயக் கூறுகளை வெளிப்படுத்திக் காட்டுவார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **8.0 இலாப நோக்கற்ற அமைப்புக் களின் நிதிக் கூற்றுக் களைத் தயாரிப்பார்.** | | | | 16 |
| | 8.1 இலாப நோக்கற்ற அமைப்புக்களில் கணக்கு வைப்ப தன் முக்கியத்து வத்தைத் தெளிவு படுத்துவார். | • இலாப நோக்கற்ற அமைப்புக் களை அறிமுகப்படுத்துதல்.<br>• கணக்கு வைப்பதன் முக்கியத் துவம்<br>• இலாபநோக்கற்ற அமைப் பொன்றில் பேணப்படும் கணக்குகள் | • இலாபநோக்கற்ற அமைப்புக்களை விளக்குவார்.<br>• இலாபநோக்கற்ற அமைப்பொன்றில் கணக்கு வைப்பதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டு வார்.<br>• இலாபநோக்கற்ற அமைப்பொன்றில் பேணப்படும் கணக்குகளை விளக்குவார். | 02 |
| | 8.2 இலாப நோக்கற்ற அமைப்புக்களின் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதிநிலைமை யினையும் வெளிப் படுத்துவார். | • அங்கத்துவக் கட்டணம்<br>• திரண்டநிதி<br>• நன்கொடை<br>• இலாப நோக்கற்ற அமைப்புக் களின் நிதிக்கூற்றுக்கள்.<br>  • வருமானக்கூற்று<br>  • நிதிநிலைமைக்கூற்று | • அங்கத்துவக் கட்டணக் கணக்கினைத் தயாரிப்பார்.<br>• ஆயுள் அங்கத்துவக் கட்டணத்தினைக் கணக்கு களில் பதிவு செய்வார்.<br>• நன்கொடைகளைக் கணக்குகளில் பதிவு செய் யும் முறையினை விளக்குவார்.<br>• திரண்ட நிதி என்றால் என்ன என்பதை தெளிவு படுத்தி அதனைக் கணிப்பிடுவார்.<br>• இலாப நோக்கற்ற அமைப்புக்களின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 நிறுவன மொன்றின் கணக் கறிக்கைகள் பூரணத்துவ மடையாத போது நிதிக் கூற்றுக் களைத் தயாரிப்பார். | | | | 14 |
| | 9.1 நிறைவில் பதிவு களை விளக்கி அதற்குரிய காரணங்களை முன்வைப்பார். | • அறிக்கைப்படுத்தல் பூரணமடை யாமைக்கான காரணங்களை விளக்குதல். | • பதிவுகள் முழுமை பெறாமைக்கான காரணங் களை முன்வைப்பார்.<br>• நிறைவில் பதிவுகளை இரட்டைப் பதிவுகளாக மாற்றுகின்ற முறையினைத் தெளிவுபடுத்துவார். | 02 |
| | 9.2 நிறைவில் பதிவு களை இரட்டைப் பதிவுகளுக்கு மாற்றம் செய்து நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | • பதிவுகள் பூரணத்துவம் அடை யாத நிலைமையில் நிறுவன மொன்றின் நிதிக் கூற்றுக் களைத் தயாரித்தல். | • பூரணத்துவமான அறிக்கையொன்றினூடாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0 பங்குடைமை வணிகமொன்றின் நிதிக் கூற்றுக் களைத் தயாரிப் பார். | | | | 55 |
| | 10.1 பங்குடைமை வணிகமொன்றின் கணக்குகளுக்குரிய சட்டச்சூழலை விளக்குவார். | • பங்குடைமை வணிகத்தின் அறிமுகம்<br>• பங்குடைமை ஒப்பந்தம்<br>• கட்டளைச் சட்டங்கள்<br>• 1890ம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டம்<br>  • 24ம் பிரிவு<br>  • 42ம் பிரிவு<br>• 2007ம் ஆண்டு 07ம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் 519ம் பிரிவு | • பங்குடைமை வணிகமொன்றை விளக்குவார்.<br>• பங்குடைமை ஒப்பந்தத்தைத் தெளிவுபடுத்தி கணக்கீட்டிற்குரிய நிபந்தனைகளை முன்வைப்பார்.<br>• பங்குடைமையுடன் தொடர்புடைய 1890ம் ஆண்டுப் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவினதும், 42ம் பிரிவினதும் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.<br>• பங்குடைமை ஒப்பந்தத்தின் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் பங்குடைமை கட்டளைச் சட்டம் செல்வாக்குச் செலுத்தும் முறையினை விளக்குவார்.<br>• 2007ம் ஆண்டு 07ம் இலக்கக் கம்பனிச் சட்டமானது பங்குடைமை வணிகத்தில் செல்வாக்கு செலுத்துவதற்குரிய காரணங்களைச் சுட்டிக் காட்டுவார். | 05 |
| | 10.2 பங்குடைமை வணிகமொன்றிற்குரிய விசேட கொடுக்கல் வாங்கல்களைப் பகுப்பாய்வு செய்வார். | • பங்காளர்களின் மூலதனப் பங்களிப்பு<br>• பங்காளர்கள் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்தல்.<br>• இடர்களைப் பொறுப்பேற்றலும் இலாப நட்டங்களை பங்காளர்களிடையே பகிர்தலும்<br>• பங்காளர்களினால் வழங்கப்படும் கடன் | • பங்குடைமையொன்றின் வணிகம் தொடர்பில் பங்காளர்களின் பங்குபற்றும் வேறு முறைகளை விளக்குவார்.<br>• பங்காளர்களின் பங்குபற்றுதல்களுக்கமைய கிடைக்கப் பெறும் அனுகூலங்களை அறிக்கைப் படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.3 பங்காளர்களது உரிமைகளை அறிந்து கொள்வார். | • பங்குடைமை வணிகமொன்றின் உரிமை<br>• மூலதனக் கணக்கு<br>• நடைமுறைக் கணக்கு | • பங்காளர்களது உரிமையைக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய கணக்கு வகைகளைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• மூலதனக் கணக்கையும், நடைமுறைக்கணக்கையும் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை விபரிப்பார்.<br>• மூலதனக் கணக்கிலும், நடைமுறைக் கணக்கிலும் உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களை வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• வழங்கப்பட்ட தரவுகளுக்கமைய மூலதனக் கணக்குகளையும், நடைமுறைக் கணக்குகளையும் தயாரிப்பார்.<br>• பங்காளர்களின் உரிமையினை அறிந்து கொள்வார். | 05 |
| | 10.4 பங்குடைமை வணிகமொன்றின் வருமானக் கூற்றினைத் தயாரித்து பங்காளர் களிடையே இலாப நட்டங்களைப் பகிர்வு செய்வார். | • வருமானக்கூற்று<br>• இலாப நட்டப் பகிர்வு<br>• பங்காளர்களிடையே இலாப நட்டம் பகிரப்படும் முறை<br>• மூலதன வட்டி<br>• பங்காளர்களின் சம்பளம்<br>• இலாப நட்டப் பங்கு<br>• இலாப நட்டப் பகிர்வுகளை நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுதல். | • பங்குடைமை வணிகமொன்றின் செயற்பாட்டு விளைவைக் (இலாபநட்டம்) கணிப்பிடுவார்.<br>• பங்குடைமை வணிகமொன்றின் இலாபம் / நட்டம் பங்காளர்களிடையே பகிரப்படும் முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வருமானக்கூற்றினைத் தயாரிப்பார்.<br>• இலாப நட்டப் பகிர்விற்குரிய உருப்படிகளை நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.5 பங்காளர்கள் பங்குடைமையில் சேரும் பொழுதும் விலகும் பொழுதும் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதிவு செய்வார். | • சீராக்கப்படும் சந்தர்ப்பங்கள்<br>• பங்காளரொருவரை பங்குடைமையில் இணைத்துக் கொள்ளல்.<br>• பங்காளரொருவர் மரணித்தல் அல்லது விலகுதல்.<br>• நன்மதிப்பை மூலதனக் கணக்கினூடாகச் சீராக்கம் செய்தல். (நிதியாண்டு தொடக்கத்திலும் இறுதித் திகதியிலும் மட்டும் உரிமையில் மாற்றம் கருத்திற் கொள்ளப்படும்.) | • பங்குடைமை வணிகமொன்றில் உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• பங்காளர்களின் உரிமை மாற்றமடையும் சந்தர்ப்பமொன்றில் நன்மதிப்பு சீராக்கம் செய்யப்பட வேண்டும் என்பதனை விளக்குவார்.<br>• நன்மதிப்புக் கணக்கொன்றைத் திறவாது அதனை மூலதனக் கணக்கினூடாக சீராக்கம் செய்வார்.<br>• நன்மதிப்பைச் சீராக்கியதன் பின்னர் மூலதன மீதியில் ஏற்படும் தாக்கத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• விலகும் பங்காளர்களின் உரிமைப் பங்கினை கடன் எனும் வகையில் பங்குடைமையில் நிறுத்தி வைத்திருக்க முடியும் என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.<br>• பங்காளரது உரிமைகள் மாற்றமடைவதை நிதி நிலைமைக்கூற்றுக்களில் வேறுபடுத்தி அறிக்கைப்படுத்துவார். | 20 |
| | | | | 300 |

# கணக்கீடு - பாடத்திட்டம் - தரம் 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 வரையறுக் கப்பட்ட கம்பனி யொன்றின் நிதிக் கூற்றுக் களைத் தயாரிப்பார். | | | | 40 |
| | 11.1 இலங்கை கணக் கீட்டு நியமங் களின் சட்டப் பின்னணிகளைப் பகுப்பாய்வு செய்வார். | • 1995ம் ஆண்டு 15ம் இலக்கக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம்.<br>• கணக்கீட்டு நியமக் குழுவின் தொழிற்பாடுகள்.<br>• இலங்கை கணக்கீட்டு, கணக் காய்வு நியம மேற்பார்வைக் குழுவின் தொழிற்பாடுகள்.<br>• இலங்கைப் பட்டயக் கணக் காளர் நிறுவனத்தின் தொழிற் பாடுகள். | • கணக்கீட்டில் கணக்கீட்டு, கணக்காய்வு நியமங் கள் சட்டத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• இலங்கைக் கணக்கீட்டு நியமக் குழுவின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• இலங்கைக் கணக்கீட்டு, கணக்காய்வு நியம மேற்பார்வைக்குழுவின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுவார். | 05 |
| | 11.2 நிதி அறிக்கைப் படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தினைப் பகுப்பாய்வு செய்வார். | • அறிமுகம்<br>• நிதிக்கூற்று<br>  • பொது நோக்கத்திற்கான நிதிக்கூற்று<br>  • விசேட நோக்கத்திற்கான நிதிக்கூற்று<br>• எண்ணக்கரு ரீதியான சட்டகத் தின் பிரிவுகள்<br>  • நிதிக் கூற்றுக்களின் நோக்கம்<br>  • நிதிக் கூற்றுக்களின் தர ரீதியான பண்புகள்<br>  • நிதிக் கூற்றுக்களின் மூலகங்கள் (கூறுகள்)<br>  • மூலகங்களை வரைவிலக் கணப்படுத்தல்.<br>  • மூலகங்களை இனங் காணலும் | • நிதிக் கூற்றுக்களின் வகைகளைப் பெயரிடுவார்.<br>• நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தின் மூலங்களை/ கூறுகளைக் குறிப்பிட் டுத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 11.3 "கணக்கீட்டு கொள்கைகள் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமும், வழுக்களும்" தொடர்பிலான கணக்கு வைப்புக்களையும், வெளிப்படுத்தல்களையும் மேற்கொள்வார். | அளவிடலும்<br>• கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம், வழுக்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமம் அறிமுகம்.<br>• கணக்கீட்டு கொள்கைகளைத் தெரிவு செய்தல்.<br>• கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள்<br>• வழுக்கள் | • கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம், வழுக்கள் என்பவற்றைக் கணக்கிட்டு நியமத்திற்கேற்ப வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• கணக்கீட்டு கொள்கைகளைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற அடிப்படை விடயங்கள் இரண்டினை முன்வைப்பார்.<br>• கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.<br>• கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்களை பதிவு செய்யும் முறையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• நடைமுறையாண்டில் இடம்பெற்ற வழுவினை இனங்கண்ட பின்னர், அவை நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட முன்னர் திருத்தப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுவார்.<br>• கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார். | 05 |
| | 11.4 இருப்பு தொடர்பில் அடிப்படை எண்ணக் கருக்களைப் பகுப்பாய்வு செய்து இருப்பினைப் பதிவு செய்வார். | • இருப்பு தொடர்பில் இலங்கைக் கணக்கீட்டு நியமமும், வரைவிலக்கணமும்.<br>• இருப்பு<br>• இருப்புக்கிரயம்<br>• தேறிய தேறத்தக்க பெறுமதி<br>• செயற்பாட்டிற்கு / பொருளுக்குரிய கிரயத்தின் மூலங்களை சரியான இனங்கண்டு இருப்புக் | • இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கேற்ப "இருப்பினை" வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• இருப்புக்கிரயம் என்பதனை விளக்குவார்.<br>• தேறிய, தேறத்தக்க பெறுமதி என்பதை விளக்கி, முதல் உள் முதல் வெளி (FIFO), நிறையிடப்பட்ட சராசரி கிரய முறை (WAC) என்பவற்றிற்கேற்ப இறுதி இருப்பினைக் கணிப்பிடுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | களை மதிப்பிடல்.<br>• கிரயச் சூத்திரங்கள்<br>• முதல் வந்து முதல் செல்லல் முறை (FIFO)<br>• நிறையிடப்பட்ட சராசரி முறை (WAC)<br>• இருப்பினைச் செலவொன்றாக இனங்காணல். | • இருப்பினைச் செலவொன்றாக இனங் காணப்பட்ட பெறுமானங்களை நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்வார். | |
| | 11.5 ஆதனம், பொறி மற்றும் உபகர ணங்களுக் குரிய அடிப்படை எண்ணக்கருக் களைப் பகுப் பாய்வு செய்து அவற்றை அறிக்கைப் படுத்துவார். | • "ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்" இலங்கை கணக்கீட்டு நியமமும் வரை விலக்கணமும்.<br>• ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்<br>• கிரயம்<br>• பெறுமானத்தேய்வு<br>• தேய்விடக்கூடிய பெறுமதி<br>• தேறிய பெறுமதி<br>• நியாயமான பெறுமதி<br>• இழிவுப் பெறுமதி<br>• பயன்தரு ஆயுட்காலம்<br>• ஆதனம், பொறி உபகரணங் களை இனங்காணல்.<br>• இனங்காணும்போது அளவிடல்.<br>• கிரயங்களை அளவிடல்<br>• கிரய மூலங்கள் | • இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கேற்ப ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• கிரயம், பெறுமானத்தேய்வு, தேய்விடக்கூடிய பெறுமதி, தேறிய பெறுமதி, நியாயமான பெறுமதி, இழிவுப் பெறுமதி, பயன்தரு ஆயுட் காலம் என்பவற்றை கணக்கீட்டு நியமத்திற்கேற்ப, தெளிவுபடுத்துவார்.<br>• இனங் காணும்போது முதலாவதாக பிற்காலக் கிரயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவார்.<br>• அளவிடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய கிரய அடிப்படைகளைக் குறிப்பிடுவார்.<br>• முதன் முறை அளவிடும்போது கிரயத்தில் அள விட வேண்டும் என்பதுடன், பின்னர் அளவிடும் போது கிரய மாதிரிக்கு அல்லது மீள் மதிப்பீட்டு மாதிரியில் அளவிடப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவார்.<br>• மீள்மதிப்பீட்டு மாதிரியில் பதிவு செய்வார்.<br>• தேய்விடப்படும் முறைகளைக் குறிப்பிட்டு, தேய்வினைப் பதிவு செய்வார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பிற்காலக் கிரயம்<br>• இனங்கண்ட பின்னர் அளவிடல்.<br>  • கிரய மாதிரி<br>  • மீள்மதிப்பீட்டு மாதிரி<br>• தேய்விடும் முறை<br>• அகற்றல் | • ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அகற்று வதைக் கணக்குகளில் பதிவு செய்வார்.<br>• ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர் பான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார். | |
| | 11.6 ஏற்பாடு, நிகழத் தக்க பொறுப்புக் கள், நிகழத்தக்க சொத்துக்கள் என்பன தொடர் பாக கணக்கு வைத்தல்களை யும், வெளிப் படுத்தல்களை யும் மேற்கொள் வார். | • "ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப் புக்கள், நிகழத்தக்க சொத்துக் கள்" என்பவற்றிற்குரிய இலங் கைக் கணக்கீட்டு நியமத்தை அறிமுகப்படுத்தல்.<br>  • ஏற்பாடு<br>  • நிகழத்தக்க பொறுப்புக்கள்<br>  • நிகழத்தக்க சொத்துக்கள் | • இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கமைய ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத் தக்கச் சொத்துக்களை வரைவிலக்கணப்படுத் திக் காட்டுவார்.<br>• ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள், நிகழத் தக்க சொத்துக்கள் என்பவற்றை வேறுபடுத்திச் சுட்டிக் காட்டுவார்.<br>• கணக்கீட்டு நியமத்திற்கமைய இனங்கண்டு வெளிப்படுத்தல்களை மேற்கொள்வார். | 05 |
| | 11.7 குத்தகைக்குரிய கணக்கு வைத் தல் தொடர்பான அடிப்படை விளக் கத்தைப் பெற்றுக் கொள்வார். | • குத்தகை நியமத்திற்கமைய குத்தகையினை வரைவிலக் கணப்படுத்தல்.<br>• குத்தகையினை வகைப்படுத்தல்.<br>  • நிதிக் குத்தகை<br>  • செயற்பாட்டுக் குத்தகை<br>• நிதிக் குத்தகையினைக் கொள் வனவாளனின் ஏடுகளில் பதிவு | • இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கமைய குத்தகையினை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• குத்தகையினைச் செயற்பாட்டுக் குத்தகை, நிதிக் குத்தகை என வகைப்படுத்தி வரைவிலக் கணப்படுத்துவார்.<br>• நிதிக்குத்தகையினைக் கொள்வனவாளரின் ஏடு களில் அறிக்கைப்படுத்துவார்.<br>• நிதிக் குத்தகைக்குரிய வட்டியினைப் பதிவு செய்வார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | செய்தல். | • குத்தகைக் கடன் கொடுநர் மீதியினை நிதி நிலைமைக்கூற்றில் அறிக்கைப்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | |
| | 11.8 அறிக்கைப் படுத்துகின்ற காலப் பகுதிக் குப் பின்னரான நிகழ்வுகள் தொடர்பில் கணக்கு வைப் புக்களையும் வெளிப்படுத் தல்களையும் மேற்கொள்வார். | • அறிக்கைப்படுத்துகின்ற காலப் பகுதிக்குப் பின்னரான நிகழ்வு களுக்குரிய இலங்கை கணக் கீட்டு நியமம்.<br>• அறிக்கைப்படுத்தப்படும் காலப் பகுதிக்கு பின்னரான நிகழ்வு களை இனங்காணலும் அளவிடலும்.<br>• சீராக்கப்படும் நிகழ்வுகள்<br>• சீராக்கப்படாத நிகழ்வுகள் | • அறிக்கைப்படுத்துகின்ற காலப் பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகளைக் கணக்கீட்டு நியமத் திற்கேற்ப வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• கணக்கீட்டு நியமத்திற்கேற்பச் சீராக்கப்படும் நிகழ்வுகள் சீராக்கப்படாத நிகழ்வுகள் என வேறு படுத்திக் காட்டுவார்.<br>• கணக்கீட்டு நியமத்திற்கேற்ப வெளிப்படுத்தல் களை மேற்கொள்வார். | 05 |
| | 11.9 வருமானங் களை இனங் காண்பதற்கான கணக்கு வைப் புக்களை மேற் கொள்வார். | • வருமானங்கள் தொடர்பிலான இலங்கை கணக்கீட்டு நியமத் தினை அறிமுகப்படுத்தல்.<br>• பல்வேறு வருமான வகைகளை இனங்காணல்.<br>• பொருள் விற்பனை<br>• சேவை வழங்கல்<br>• வட்டி<br>• பங்குலாபம் | • வருமான நியமத்திற்கமைய வருமானத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• பல்வேறு வருமான வகைகளை இனங்காண்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **12.0 நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும் முன்வைக்கும்போதும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பயன் படுத்துவார்.** | | | | **90** |
| | 12.1 வரையறுக்கப் பட்ட கம்பனி யொன்றுடன் தொடர்பான சட்ட ரீதியான பின்னணி களைத் தேடி யறிவார். | • வரையறுக்கப்பட்ட கம்பனி தொடர்பாக அறிமுகப்படுத்தல்.<br>• கம்பனிகளை வகைப்படுத்தல்.<br>• கம்பனிக் கணக்குகளுக்குரிய சட்டரீதியான பின்னணி.<br>• கம்பனியொன்றினால் பேணப் பட வேண்டிய அறிக்கைகள்<br>• வரையறுக்கப்பட்ட கம்பனி யொன்றின் பங்கு வகைகள்.<br>• கூறப்பட்ட பங்கு மூலதனம் | • வரையறுக்கப்பட்ட கம்பனிகளை வரைவிலக் கணப்படுத்துவார்.<br>• 2007-ம் ஆண்டு 07-ம் இலக்கக் கம்பனிச் சட்டத் திற்கமைய கம்பனிகளை வகைப்படுத்துவார்.<br>• கம்பனிக் கணக்குகளுக்குச் சட்டப் பின்னணிகள் காணப்படுகின்றன என்பதனைத் தெளிவுபடுத்து வார்.<br>• கம்பனியொன்றினால் பேணப்படும் அறிக்கை களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• கம்பனியொன்றினால் வழங்கப்படக்கூடிய பங்கு வகைகளையும் கூறப்பட்ட மூலதனத்தையும் விளக்குவார். | 06 |
| | 12.2 பங்கு வழங்க லின் போதான பெறுமதியினை ஒரேமுறையில் பெறும் பொழுது அதற்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்வார். | • பங்கு வழங்கலின் பெறுமதி<br>• பங்கு வழங்கலும் அவற்றை அறிக்கைப்படுத்தலும். | • பங்கு வழங்கலை விளக்குவார்.<br>• பங்கு வழங்கல் பெறுமதியினைப் பெற்றுக் கொள்ளும் முறைகளைப் பெயரிட்டுக் காட்டு வார்.<br>• பங்கு வழங்கலின் பணப் பெறுமதியை ஒரே முறையில் பெற்றுக் கொள்ளும் பொழுதான கணக்குகளைத் தயாரிப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 12.3 ஒதுக்கங்களை மூலதனமாக்கல், உரிமை வழங்கல் என்பன தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைக் கணக்குகளில் பதிவு செய்வார். | • உரிமைப் பங்கு வழங்கல்.<br>• ஒதுக்கங்களை மூலதனமாக்கல். | • உரிமைப்பங்கு வழங்கலை விளக்குவார்.<br>• ஒதுக்கங்களை மூலதனமாக்குதல் பற்றி விபரிப்பார்.<br>• உரிமை வழங்கலுக்கும் ஒதுக்கங்களை மூலதனமாக்கலுக்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• உரிமை வழங்கலையும் ஒதுக்கங்களை மூலதனமாக்கலையும் கணக்குகளில் பதிவு செய்வார். | 04 |
| | 12.4 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பார். | • இலங்கைக் கணக்கீட்டு நியம விதப்புரைகளுக்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலும், அவற்றை முன்வைத்தலும்.<br>  • இலாபம் அல்லது நட்டமும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றும்<br>  • நிதிநிலைமைக்கூற்று<br>  • உரிமைமாற்றல் கூற்று<br>  • குறிப்புக்கள்<br>• இலங்கைக் கணக்கீட்டு நியம விதப்புரைகளுக்கமைய காசுப் பாய்ச்சல் கூற்று | • "நிதிக்கூற்றுக்களை முன்வைத்தல்" நியமத்தின் விதப்புரைகளுக்கமைய இலாபம் அல்லது நட்டத்தையும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றையும் தயாரிப்பார்.<br>• நிதிநிலைமைக்கூற்றைத் தயாரிப்பார்.<br>• உரிமை மாற்றல் கூற்றைத் தயாரிப்பார்.<br>• நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களை முன்வைப்பார்.<br>• செயற்பாட்டு நடைமுறைகளை விளக்குவார்.<br>• முதலீட்டுச் செயற்பாடுகளை விளக்குவார்.<br>• நிதிச் செயற்பாடுகளை விளக்குவார்.<br>• கணக்கீட்டு நியமத்திற்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பார். | 72 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **13.0 விகிதங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்து வியாக்கியானப் படுத்தி முகாமைத் தீர்மானங்களுக்குத் தேவையான தகவல்களை முன் வைப்பார்.** | | | | **40** |
| | 13.1 நிதிக்கூற்றுக் களை வியாக்கியானம் செய்வதன் முக்கியத் துவத்தையும் அதன் தேவைப் பாட்டினையும் பகுப்பாய்வு செய்வார். | • நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்தல், வியாக்கியானம் செய்தல் அறிமுகப் படுத்தல்.<br>• நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்தலுக்கும், வியாக்கியானம் செய்தலுக்குமான தேவைப்பாடு.<br>• விகித வகைகள்<br>• திரவத்தன்மை விகிதம்<br>• இணைப்பு விகிதம்<br>• இலாபத்தன்மை விகிதம்<br>• செயற்பாட்டு விகிதம்<br>• முதலீட்டு விகிதம் | • நிதிக்கூற்றுப் பகுப்பாய்வையும் வியாக்கியானப் படுத்தலையும் விளக்குவார்.<br>• நிதிக்கூற்றுப் பகுப்பாய்வு, வியாக்கியானப்படுத்தல் என்பவற்றின் தேவைப்பாட்டினை முன் வைப்பார்.<br>• நிதிக்கூற்றுப் பகுப்பாய்வு வியாக்கியானப்படுத்தல் என்பவற்றிற்கான நுட்ப முறையொன்றாகப் பல்வேறு விகித வகைகளைப் பயன்படுத்த முடியும் என்பதனைத் தெளிவுபடுத்துவார். | 10 |
| | 13.2 திரவத்தன்மை விகிதங்களைக் கணிப்பிட்டு வியாக்கியானப் படுத்துவார். | • திரவத்தன்மை விகிதம் அறிமுகம்<br>• நடைமுறை விகிதம்<br>• விரைவு விகிதம்<br>• கணிப்பிடப்பட்ட விகிதங்களை ஒப்பிடல்.<br>• முன்னைய வருடத் தரவுகளுடன்<br>• போட்டி நிறுவனங்களுடன் ஒத்த தன்மை கொண்ட தரவுகளுடன் | • திரவத்தன்மை விகிதத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• திரவத்தன்மை விகிதங்களைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• நடைமுறை விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• விரைவு விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• விகிதங்களை ஒப்பிட்டுத் தீர்மானம் எடுப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 13.3 இணைப்பு விகிதத்தைக் கணிப்பிட்டு அதனை வியாக்கியானம் செய்வார். | • இணைப்பு விகிதம் அறிமுகம்<br>• கடன் விகிதம்<br>• கடன் உரிமை விகிதம்<br>• வட்டிக்காப்பு விகிதம்<br>• கணிப்பிடப்பட்ட விகிதங்களை ஒப்பிடுதல்.<br>• முன்னைய வருடத் தரவு களுடன்<br>• போட்டி நிறுவனங்களின் ஒத்த தன்மையுள்ள தரவுகளுடன் | • இணைப்பு விகிதத்தினை விளக்குவார்.<br>• கடன் உரிமை விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• கடன் விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• வட்டிக் காப்பு விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• விகிதங்களை ஒப்பிட்டுத் தீர்மானமெடுப்பார். | 06 |
| | 13.4 இலாபத் தன்மை விகிதங் களைக் கணிப்பிட்டு வியாக்கியானம் செய்வார். | • இலாபத்தன்மை விகிதம் அறிமுகம்<br>• மொத்த இலாப விகிதம்<br>• தேறிய இலாப விகிதம்<br>• மொத்த சொத்துக்களின் மீதான விளைவு விகிதம்<br>• உரிமையின் மீதான விளைவு விகிதம்<br>• கணிப்பிடப்பட்ட விகிதங்களை ஒப்பிடுதல்.<br>• முன்னைய வருடத் தரவு களுடன்<br>• போட்டி நிறுவனங்களின் ஒத்த தன்மை கொண்ட தரவுகளுடன் | • இலாபத்தன்மை விகிதத்தை விளக்குவார்.<br>• இலாபத்தன்மை விகிதத்தைப் பெயரிட்டு அதனை விபரிப்பார்.<br>• மொத்த இலாப விகிதத்தை கணிப்பிடுவார்.<br>• தேறிய இலாப விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• மொத்தச் சொத்துக்களின் மீதான விளைவு விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• உரிமை மீதான விளைவு விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• விகிதங்களை ஒப்பிட்டுத் தீர்மானமெடுப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 13.5 செயற்பாட்டு விகிதத்தினைக் கணிப்பிட்டு வியாக்கியானம் செய்வார். | • செயற்பாட்டு விகிதம் அறிமுகம்<br>• இருப்புப் புரள்வு விகிதம்<br>• இருப்புப் பேணும் காலம்<br>• கடன்பட்டோர் புரள்வு விகிதம்<br>• கடன் சேகரிக்கும் காலம்<br>• கணிப்பிடப்பட்ட விகிதங்களை ஒப்பிடல்.<br>• முன்னைய வருடத் தரவு களுடன்<br>• போட்டி நிறுவனங்களின் ஒத்த தன்மை கொண்ட தரவுகளுடன் | • செயற்பாட்டு விகிதத்தை விளக்குவார்.<br>• செயற்பாட்டு விகிதத்தைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• இருப்புப் புரள்வு விகிதத்தைக் கணிப்பிடுவார்.<br>• இருப்புப் பேணல் காலத்தைக் கணிப்பிடுவார்.<br>• கடன்பட்டோர் புரள்வு விகிதத்தை கணிப்பிடுவார்.<br>• கடன் சேகரிக்கும் காலத்தைக் கணிப்பிடுவார்.<br>• விகிதங்களை ஒப்பிட்டுத் தீர்மானங்களை எடுப்பார். | 06 |
| | 13.6 முதலீட்டாளர் களின் விகிதங் களைக் கணிப் பிட்டு வியாக்கி யானம் செய்வார். | • முதலீட்டாளர்களின் விகிதங் களை அறிமுகப்படுத்தல்.<br>• பங்கொன்றிற்கான உழைப்பு<br>• பங்கொன்றிற்கான பங்கிலாபம் | • முதலீட்டாளர்களின் விகிதங்களை விளக்குவார்.<br>• முதலீட்டாளர்களின் விகிதங்களைப் பெயரிட்டு, அதனைத் தெளிவுபடுத்துவார்.<br>• பங்கொன்றிற்கான உழைப்பினைக் கணிப்பிடுவார்.<br>• பங்கொன்றிற்கான பங்கிலாபத்தைக் கணிப்பிடுவார்.<br>• விகிதங்களை ஒப்பிட்டுத் தீர்மானமெடுப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **14.0 முகாமைத் துவக் கணக் கீட்டின் அடிப்படை எண்ணக் கருக்களை மதிப்பீட்டிற் குட்படுத்து வார்.** | | | | **90** |
| | 14.1 முகாமைத்துவக் கணக்கீட்டினை தீர்மானமெடுத் தல் செயல் முறையுடன் தொடர்புபடுத்து வார். | • அறிமுகம்<br>• தீர்மானமெடுத்தல் செயன் முறைகள்<br>• முகாமைக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்குமிடையி லான வேறுபாடுகள் | • முகாமைத்துவத் தீர்மானங்களை விளக்குவார்.<br>• முகாமைத்துவத் தீர்மானமெடுக்கும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கருமங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• நிதிக் கணக்கீட்டிற்கும் முகாமைக் கணக்கீட்டி ற்குமிடையிலான வேறுபாடுகளை அட்டவணைப் படுத்துவார். | 06 |
| | 14.2 முகாமைக் கணக்கீட்டின் அடிப்படை எண்ணக்கருக் களைப் பகுப் பாய்வு செய்வார். | • கிரயத்தினை வரைவிலக்கணப் படுத்தலும், கிரய எண்ணக் கருவும்.<br>• கிரய அலகு<br>• கிரய மையம்<br>• கிரய வகைப்படுத்தல்<br>• இருப்புக் கணிப்பிடல் நோக் கத்திற்காக<br>• உற்பத்திக் கிரயமும், காலக் கிரயமும்<br>• நேர்க்கிரயம், நேரில் கிரயம்<br>• தீர்மானமெடுப்பதற்காக<br>• நிலையான கிரயமும் மாறும் கிரயமும்<br>• உரிய கிரயமும் உரிய தல்லாத கிரயமும்<br>• ஆழ்ந்த கிரயம் / பொறுத் துள்ள கிரயம்<br>• அமையக் கிரயம் | • கிரயம், கிரய அலகு, கிரயமையம் போன்ற எண்ணக்கருக்களை விபரிப்பார்.<br>• பல்வேறு முகாமைத்துவ நோக்கங்களின் அடிப் படையில் கிரயங்களை வகைப்படுத்துவார்.<br>• இருப்பினைக் கணிப்பீடு செய்வதற்காக கிரய வகைகளைப் பெயரிட்டு அவற்றை விளக்குவார்.<br>• தீர்மானமெடுப்பதற்காகக் கிரயங்களை வகைப் படுத்துவார்.<br>• கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளுக்காகக் கிரயங் களை வகைப்படுத்திக் காட்டுவார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கட்டுப்படுத்தல் செயற்பாட்டிற்காக<br>• கட்டுப்படுத்தக்கூடிய, கட்டுப்படுத்த முடியாத கிரயங்கள் | | |
| | 14.3 பொருள் கட்டுப் பாட்டுச் செயன் முறையைப் பயன் படுத்துவர். | • பொருள் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்<br>• பொருள் கட்டுப்பாட்டுச் சந்தர்ப் பங்கள்<br>• பொருள் கொள்வனவு செயன் முறை<br>• பொருள் களஞ்சியப்படுத்தல் கட்டுப்பாடு<br>• பொருள் களஞ்சிய கட்டுப்பாடு<br>• களஞ்சியசாலைக் கட்டுப் பாட்டிற்குத் தேவையான ஆவணங்கள்<br>• இருப்பு மட்டக் கட்டுப்பாடு<br>• பொருளாதாரக் கட்டளைக் கணியம்<br>• மறுகட்டளை மட்டம்<br>• உச்ச இருப்பு மட்டம்<br>• இழிவு இருப்பு மட்டம்<br>• சராசரி இருப்பு மட்டம் | • பொருள் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• பொருள் கட்டுப்பாட்டுச் சந்தர்ப்பங்களைப் பெய ரிட்டுக் காட்டுவார்.<br>• பொருள் கொள்வனவு முறையினை முன்வைப் பார்.<br>• பொருள் களஞ்சியப்படுத்தல் கட்டுப்பாட்டு முறை யினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• பொருள் களஞ்சியசாலையில் இருக்கும் பொழு தில் கட்டுப்பாட்டிற்குரிய ஆவணங்களைப் பெயரிட் டுக் காட்டுவார்.<br>• பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைக் கணிப்பிடுவார்.<br>• வழங்கப்பட்ட தரவுகளுக்கமைய மறுகட்டளை மட்டம், உச்ச இருப்பு மட்டம், இழிவு இருப்பு மட்டம், சராசரி இருப்பு மட்டம் என்பவற்றைக் கணிப்பிடுவார்.<br>• பொருள் விநியோகக் கட்டுப்பாட்டிற்காக FIFO முறையையும் WAC முறையையும் பயன்படுத்து வார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பொருள் விநியோக விலை யிடல்<br>• முதல் உள், முதல் வெளி விலையிடல் முறை (FIFO)<br>• நிறையிடப்பட்ட சராசரிக் கிரய விலையிடல் முறை (WAC) | | |
| | 14.4 கூலிக் காலம் தொடர்பாக அறிக்கைப் படுத்துவார். | • கூலிக்கிரயம்<br>• கூலிக்கிரயக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்<br>• கூலிக்காலத்தை அறிக்கைப் படுத்துதல். | • கூலிக்கிரயத்தை தெளிவுபடுத்துவார்.<br>• கூலிக்கிரயக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• கூலிக்கிரயத்தை அறிக்கைப்படுத்தும் முறை யினைக் குறிப்பிட்டுக் காட்டுவார். | 05 |
| | 14.5 நேர அடிப் படையிலும் வெளியீட்டி னடிப்படையி லும் சம்பளத் தைக் கணிப் பிடுவார். | • சம்பளக் கொடுப்பனவு முறை<br>• நேர அடிப்படையில்<br>• வெளியீட்டு அடிப்படையில்<br>• மேலதிக நேரம் | • சம்பளக் கொடுப்பனவு முறைகளைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• நேர அடிப்படையையும் வெளியீட்டு அடிப் படையையும் விளக்குவார்.<br>• மேலதிக நேரக் கூலிக் கொடுப்பனவைத் தெளிவுபடுத்துவார்.<br>• மேலதிக நேரக் கூலிக் கொடுப்பனவினைக் கணிப்பிடுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 14.6 சம்பளப் பட்டியலைத் தயாரிப்பார். | • சம்பளப் பட்டியலும் அதன் மாதிரியும்<br>• சம்பளத் பட்டியலைத் தயாரிக்கும்பொழுது பயன்படுத்தப்படும் ஆவணங்கள்<br>• சம்பளப் பட்டியலொன்றில் காணப்படும் தகவல்களைக் கணக்குகளில் பதிவு செய்தல். | • சம்பளப் பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேவையான மூல ஆவணங்களைப் பெயரிட்டுக் காட்டுவார்.<br>• சம்பளப் பட்டியலில் உள்ளடக்கப்படும் உருப்படிகளைக் குறிப்பிடுவார்.<br>• அடிப்படைச் சம்பளம்<br>• படிக் கொடுப்பனவுகள்<br>• மொத்தச் சம்பளம்<br>• கழிப்பனவுகள்<br>• தேறிய சம்பளம்<br>• சம்பளப் பட்டியலொன்றின் மாதிரியை முன்வைப்பார்.<br>• சம்பளப் பட்டியலைத் தயாரிப்பார்.<br>• சம்பளப் பட்டியலின் தகவல்களை பேரேட்டுக் கணக்குகளில் தாக்கல் செய்வார். | 20 |
| | 14.7 பொது மேந்தலைக் கிரயத்தினை உற்பத்திகளுக்குப் பகிர்வார். | • பொது மேந்தலைக் கிரயங்களை அறிமுகப்படுத்துதல்.<br>• பொது மேந்தலைக் கிரயங்களை வகைப்படுத்துதல்.<br>• உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்<br>• உற்பத்தியல்லாத பொது மேந்தலைக்கிரயம் | • பொது மேந்தலைக் கிரயங்களை விளக்குவார்.<br>• பொது மேந்தலைக் கிரயங்களை உற்பத்தி, உற்பத்தியல்லாதது என வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• பொது மேந்தலைக் கிரயப் பகிர்வுப் படிமுறைகளைப் பட்டியல்படுத்தித் தெளிவுபடுத்துவார்.<br>• பொது மேந்தலைக் கிரயப் பகுப்பாய்வுப் பத்திரமொன்றைத் தயாரிப்பார்.<br>• பொது மேந்தலைக் கிரயங்களை கிரய அலகுகளுக்கிடையே உள்ளடக்கி அலகுக் கிரயத்தினைக் கணிப்பிடுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பொது மேந்தலைக் கிரயங்களைப் பகிர்தல் செயன்முறை<br>• திரட்டுதல் / ஒதுக்குதல்<br>• பகிர்தல்<br>• முதலாம் கட்டப் பகிர்வு<br>• இரண்டாம் கட்டப் பகிர்வு (உள்ளக சேவைகளின்றி)<br>• உறிஞ்சுதல்<br>• பொதுமேந்தலைக்கிரயம்<br>• உறிஞ்சுதல் வீதம் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 15.0 கிரய நடத்தைகள், கிரய அளவு இலாபப் பகுப்பாய்வு என்பவற்றினூடாக முகாமைத் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வார். | | | | 20 |
| | 15.1 கிரய நடத்தையினைப் பகுப்பாய்வு செய்வார். | • கிரய நடத்தையினை அறிமுகப்படுத்துதல்.<br>• நடத்தையின் அடிப்படையில் கிரயத்தை வகைப்படுத்தல்.<br>  • நிலையான கிரயம்<br>  • மாறும் கிரயம் | • கிரய நடத்தையின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• மாறும் கிரயத்தை விளக்குவார்.<br>• நிலையான கிரயத்தை விளக்குவார்.<br>• கிரய நடத்தையை வரைகோடுகள் மூலம் சுட்டிக் காட்டுவார். | 02 |
| | 15.2 கிரய அளவு இலாபப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி தீர்மானமெடுப்பதற்குப் பங்களிப்புச் செய்வார். | • அலகொன்றிற்கான பங்களிப்பு<br>• மொத்தப் பங்களிப்பு<br>• விற்பனைப் பங்களிப்பு விகிதம் (இலாப அளவு விகிதம்)<br>• சமப்பாட்டுப்புள்ளி<br>• பாதுகாப்பு எல்லை<br>• உணர்திறன் பகுப்பாய்வு<br>  • விற்பனை விலை மாற்றமடைதல்<br>  • விற்பனை அளவு மாற்றமடைதல். | • அலகுக்கான பங்களிப்பினைக் கணிப்பிடுவார்.<br>• மொத்தப் பங்களிப்பினைக் கணிப்பிடுவார்.<br>• விற்பனை பங்களிப்பு விகிதத்தினைக் கணிப்பிட்டுத் தீர்மானம் எடுப்பார்.<br>• சமப்பாட்டுப்புள்ளி அலகுகளின் எண்ணிக்கையையும் பெறுமதியையும் கணிப்பிடுவார்.<br>• பாதுகாப்பு எல்லையைக் கணிப்பிடுவார்.<br>• கிரய அளவு இலாபப் பகுப்பாய்வினைச் சமன்பாட்டின் மூலமும் வரைபடத்தின் மூலமும் முன்வைப்பார்.<br>• கிரய அளவு இலாபப் பகுப்பாய்வின் மூலம் தீர்மானமெடுப்பார்.<br>• விற்பனை விலையும் விற்பனை அளவும் வேறுபடும்பொழுது உணர்திறனைக் காட்டும் உருப்படிகளைச் சுட்டிக் காட்டுவார். | 18 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 16.0 மூலதன முதலீட்டுத் தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவுவார். | | | | 20 |
| | 16.1 நீண்டகாலத் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டினைத் திட்டமிடுவார். | • நீண்டகாலத் தீர்மானமெடுக்கும் செயற்பாடு | • நீண்டகாலத் தீர்மானமெடுத்தலை விளக்குவார்.<br>• நீண்டகாலத் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• நீண்டகாலத் தீர்மானமெடுத்தல் தொடர்பில் காசுப் பாய்ச்சல் மதிப்பீட்டினை இனங்கண்டு தேறிய காசுப்பாய்ச்சலினைக் கணிப்பிடுவார். | 04 |
| | 16.2 பல்வேறு மூலதன மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி முதலீட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கு உதவுவார். | • முதலீட்டு மதிப்பீட்டு நுட்பமுறை<br>• கணக்கீட்டுத் திரும்பல் வீதம்<br>• திரும்பல் காலம்<br>• தேறிய நிகழ்காலப் பெறுமதி<br>• பணத்தின் காலப் பெறுமதி<br>• மூலதனத்தின் சந்தர்ப்பக் கிரயம்<br>• முதலீட்டு மதிப்பீட்டு நுட்ப முறைகளின் அடிப்படையில் முதலீட்டுத் தீர்மானங்களை எடுத்தல். | • முதலீடுகளை மதிப்பிடுவதற்குப் பல்வேறு நுட்ப முறைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.<br>• கணக்கீட்டுத் திரும்பல் விகிதத்தைக் கணிப்பிட்டுத் தீர்மானம் எடுப்பார்.<br>• திரும்பல் காலத்தைக் கணிப்பிட்டுத் தீர்மானமெடுப்பார்.<br>• தொடர்பான கிரயம், தொடர்பற்ற கிரயங்களை விளக்குவார்.<br>• பணத்தின் காலப் பெறுமதியினை விளக்குவார்.<br>• தேறிய நிகழ்காலப் பெறுமதி முறையினை விளக்குவார்.<br>• தேறிய நிகழ்காலப் பெறுமதியினைக் கணிப்பிட்டுத் தீர்மானமெடுப்பார்.<br>• முதலீட்டு மதிப்பீட்டு நுட்பமுறைகளின் அனுகூலங்கள், பிரதிகூலங்களைச் சுட்டிக் காட்டுவார். | 16 |
| | | | | 300 |

## 8.0 கற்றல் - கற்பித்தல் முறைகள்

- செயற்பாட்டு அடிப்படையிலான பிரவேசத்தினூடாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.
- சகல தேர்ச்சிகளுக்குமான கற்றல் பேறுகள் முன்மொழியப்பட்டுள்ளதுடன் அவற்றை அடைந்து கொள்வதற்கான மாணவர் மைய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினைத் திட்டமிடல் மிகவும் பொருத்தமானது.
- கற்றல் - கற்பித்தல் முறை இயலுமான வரையில் பரிமாற்று வகிபாக முறையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பரிமாற்று ஆசிரியர் வகிபாகம் வகுப்பறை மட்டத்தில் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- புதிய பிரவேசத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளினூடாகச் செயற்பாட்டு ரீதியான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எண்ணக்கருக்கள், தத்துவங்கள், சிந்தனைகளை அடிப்படையாகக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஒரு செயற்பாட்டினை வகுப்பறை மட்டத்தில் செயற்படுத்துவதற்காக ஒரு பாடவேளைக்கு மேலாக கூடுதலான காலம் தேவைப்படும். அதன் காரணமாக பாடநேரசூசியினைத் தயாரிக்கும்போது உரிய முறையில் பாடவேளையினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பாடநேரசூசியினைத் தயாரிப்பதற்கு பாடசாலை முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும்.
- அதாவது, செயற்பாடொன்று ஒரு பாடவேளைக்கு மேலதிகமாக தொடர்ச்சியாக மேற்கொள்வதை விட, தேடியறிதலின் பின் எதிர்வரக்கூடிய தினமொன்றில் முன்வைப்பதற்காகச் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் மாணவர்களின் அனுபவங்கள் மிகவும் சிறப்படைவ தற்கு இடமுண்டு.
- தேடியறிந்து கண்டுபிடித்தவைகளை முன்வைப்பதற்கு முன்னர் மாணவர்களின் வெளியீடுகளை ஏதாவது இடமொன்றில் வைப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்துவதற்கும், தேடியறிந்து குழு கலைந்து செல்லும் வகையில் வகுப்பறையில் உட்கார வைப்பதன் மூலம் மிகவும் சிறப்பாக மாணவர்கள் விமர்சனம் செய்வதற்கும், விரிவாக்கலிலும் கலந்து கொள்ளச் செய்வதற்கும் முடியுமாயிருக்கும்.

## 9.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்ட ஒழுங்கமைப்பும்

- முன்மொழியப்பட்ட பாடவிதான மறுசீரமைப்பிற்கேற்ப க.பொ.த. (உயர்தரம்) கணக்கீட்டிற்கு வாரத்திற்கு பத்துப் பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- அதிபர்கள், பகுதித் தலைவர்கள் போன்றோர்களது பங்களிப்புடன் தவணையொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுமுறை காலத்தின்போது குறித்த பாட ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்றை நடத்திப் பாடசாலைக்குப் பொருந்தக்கூடியவாறு காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி செயற்பாட்டுத் திட்டமிடலை மறுசீரமைப்புச் செய்து, ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் தேவையான தரரீதியான உள்ளீட்டுத் தொகுதிகளை வெவ்வேறாக ஒதுக்கப்பட்டுத் தயாரிக்கப்படுவதனூடாக ஆசிரியரின் வேலைப்பளு மிகப் பயனுடையதாகவும், இலகுவான தாகவும் அமையும்.
- 2017 இல் அறிமுகப்படுத்தப்படும் இப்பாடத்திட்டத்திற்கமைய வருடமொன்றுக்கு 300 பாடவேளைகள் வீதம் இரு வருடங்களுக்குமாக 600 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பாடவேளைகள் பாட உள்ளடக்கங்களுக்கும் செயற்பாடுகளுக்குமானவையாகும்.
- பாடசாலை முகாமைத்துவம், தலைமைத்துவம் தொடர்பாக தேவையான சந்தர்ப்பங்களின்போது சமூக ஒத்துழைப்புடன் தரரீதியான உள்ளீடுகளைத் தயாரிப்பது மிகப் பொருத்தமானது.
- தேடியறிதல் அறிவுறுத்தல் பத்திரத்தினையும், வாசிப்புப் பத்திரத்தினையும் மெழுகு அட்டையினால் உறையிடப்படுவதன் மூலம் (Laminating) அவற்றைப் பல வருடங்களுக்குப் பயன்படுத்த முடியும்.
- முன்மொழியப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலாக கற்றலை விரிவுபடுத்தி, மாணவர்களது விசேடமான திறன்களைச் செப்பமிடக்கூடியவாறு
    - விவாதம்
    - சுவர் பத்திரிகை
    - சஞ்சிகை
    - பாடசாலை வணிகச் சங்கம் / கழகம்
    - வணிக தினம்
    - வணிகக் கண்காட்சி
    - கல்விச் சுற்றுலா

  போன்ற **இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுவது முக்கியமானதாகும்.**

தர்க்கரீதியாகக் கற்றுக் கொள்ளும் பாடவிடயங்களில் பிரயோக ரீதியான அனுபவங்களை வழங்கல் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுதல், எதிர்பார்க்கும் தேர்ச்சியை மிகவும் பயனுடையதாக வளர்ச்சியடையச் செய்தலுடன் பாடத்தின் மீது ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்குப் பல்வேறு வேலைத்திட்டங்கள் பாடசாலையினுள் நடைமுறைப்படுத்த முடியும். இவ்வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பாடசாலைக் கொள்கைகள் வகுத்துக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

அதேபோன்று இக் கொள்கைகளுக்கேற்ப செயற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை பாடசாலை வருடாந்த வேலைத்திட்டத்தினுள் உட்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

- வணிக ரீதியான செயற் திட்டங்களை ஆரம்பித்தல், இதற்காக வேண்டிப் பொருத்தமான அமைப்புக்களை உருவாக்குதலும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தலும்.
- வணிகங்களை நடத்துதல்.
- யாதேனுமொரு வணிகத்தை திட்டமிடலும் அதனை நிதி நிறுவனங்களது உதவியுடன் நடைமுறைப்படுத்தலும், கொடுக்கல் வாங்கல் களைப் பதிவுசெய்தலும்.
- பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களை அவதானித்து அறிக்கையொன்றை வைத்திருப்பதற்கு ஊக்கப்படுத்துதல்.
- பாடசாலைக் காரியாலயத்தில் காணப்படும் உரிய புத்தகங்கள் மூலம் விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதில் ஈடுபடுத்தல்.
- ஆசிரியரது உதவியுடன் பாடசாலையின் வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்தல்.
- வகுப்பறையினுள் வணிக வாசிகசாலையொன்றை நடத்திச் செல்லுதல்.
- தனது வீட்டிலே வாசிகசாலையொன்றை நடத்திச் செல்லுவதற்கு மாணவர்களை உற்சாகப்படுத்துதல்.

**சமூகத்தைத் தொடர்புறுத்திக் கொள்ளும் முறை**

- தெரிவு செய்த தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளக்கூடிய வளவாளர்களை பாடசாலைக்கு வரவழைத்து மாணவர்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

**பாடசாலை மேற்பார்வையின்போது கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள்**

- தவணைக் குறிப்புக்களும், ஆயத்தக் குறிப்புக்களும்
- திட்டமிடப்பட்ட நவீன ஆக்கரீதியான செயற்பாடுகள்
- ஆசிரியர் மூலம் தயாரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளை மேம்படுத்தும் பொருட்டு கருவிகளைப் பாடசாலைக்குப் பொருத்தமான முறையில் நவீன கற்றல் - கற்பித்தல் முறைகளுக்கேற்பப் பாடசாலையினுள் அச்செயற்பாடுகள் நடைபெறுகின்றது என்பது தொடர்பாக.
- செயற்பாடுகளுடன் இணைந்ததாக ஆசிரியர் மாணவர் கலந்துரையாடல்.
- பிள்ளைகளது அனுபவங்கள் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- தர உள்ளீடுகளைப் பயன்படுத்துதல்.
- மதிப்பீட்டுச் செயற்பாடுகள்.

**நடைமுறைப்படுத்தும்பொழுது மேலெழும் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள்**

- ஒவ்வொரு பாடசாலைத் தவணைகளிலும் பாடக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மேலெழும் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனத்தைச் செலுத்தவும்.
- முதலாவதாக பாடசாலையில் பல்வேறு பிரிவினர்களுடன் கலந்துரையாடல் செய்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக வகுப்பறைப் பிரச்சினைகள், தேவையான பொருட்களது பற்றாக்குறை, நேரத்தை ஒதுக்கிக் கொள்வதில் பிரச்சினைகள்.
- இரண்டாவதாக ஆசிரிய ஆலோசகர்களுக்கும், ஏனைய உரிய நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் முன்வைக்கச் செய்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 10.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு வேலைத்திட்டத்தினடிப்படையில் ஒவ்வொரு தவணைக்குமுரிய குறித்த தேர்ச்சியையும், தேர்ச்சி மட்டத்தையும் உள்ளடக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளை ஆக்கபூர்வமானதாகச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

13 ஆவது தரத்தின் இறுதியிலே தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு இப்பாடவிதானம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான பரீட்சை முதலாவதாக 2019 ஆம் ஆண்டில் நடைபெறும். இப்பரீட்சையின் வினாப்பத்திரங்களின் மாதிரி, அதன் தன்மை என்பன தொடர்பாக தேவையான விபரங்கள் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.